LIBRARY
2 DEC 2016
UNIVERSITY, SRI LANKA

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

மூன்றாம் வருட/ முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு 2013/2014

(ஏப்ரல் / மே 2016)

**TLS 3133 Literature of Tamil Diaspora**

நேரம்: 03 மணித்தியாலங்கள்

பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக.

எழுத்துத் தெளிவில்லாதவிடத்து புள்ளிகள் குறைக்கப்படும்.

---

01.அ) புலம்பெயர் இலக்கியம், புகலிட இலக்கியம், குடிபுகுந்தோர் இலக்கியம் (Immigrant's Literature) ஆகிய தொடர்களை விளக்குக.

ஆ) வட ஐரோப்பா, கனடா, அவுஸ்திரேலியா முதலிய புகலிடப் பிரதேசங்களில் உருவாகும் தற்கால இலக்கியங்களை மேற்கூறியவற்றுள் எத் தொடரால் குறிப்பிடலாம்? உமது விடையை நியாயப்படுத்துக.

02.அ) பால், பால்மை (Sexuality), பால்நிலை (Gender) ஆகிய பதங்களை வரைவிலக்கணப்படுத்துக.

ஆ) தமிழ்ப் புலம்பெயர் சமூகத்தின் எவரேனும் ஒரு பெண் எழுத்தாளியின் ஆக்கங்களை உதாரணமாகக் கொண்டு பால்நிலை, பால்மை குறித்த கருத்துகள் கையாளப்பட்டிருக்குமாற்றை விபரிக்குக.

03. 'புலம்பெயர்ந்த ஈழத்தமிழர் எதிர்கொண்ட பிரச்சினைகள் அனைத்தும் கவிதைகளில் வெளிப்பட்டுள்ளன' இக் கூற்றின் பொருத்தப்பாட்டினைப் பரிசீலிக்குக.

04. 'ஈழத்துத் தமிழ் நாவல் போக்குகளின் தொடர்ச்சியையும் புலம்பெயர் நாவல்களில் காணமுடிகின்றது' ஆராய்க.

05. வடிவ நோக்கிலே புலம்பெயர் தமிழ்ச் சிறுகதைகள் அடைந்துள்ள மாற்றங்கள் குறித்து விளக்குக.

06. புலம்பெயர் தமிழ்ச் சஞ்சிகைகளின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து ஆராய்க.

****************************************